# உயர்கல்வி உதவித்தொகை திட்டம்

எல்லாம் வல்ல இறைவனின் அருளாசியுடனும், எம்குழு உறுப்பினர்களின் மேலான ஒத்துழைப்புடனும் **13ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் அறம்செய்,** இவ்வாண்டும் கல்வி நிதியுதவி வழங்க உள்ளது. தகுதியும் திறமையுமுள்ள மாணாக்கர்களை ஊக்குவிக்க அறம்செய் கல்வி அறக்கட்டளை ஆர்வமாயுள்ளது. கடந்த பனிரெண்டு வருடங்களில் நமது பட்டணத்து மாணாக்கர்களின் உயர்கல்விக்காக சுமார் எழுபத்தி ஒன்று லட்சத்து நாற்பத்தி நான்கு ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்தி ஏழு **(Rs.71,44,557/=)** ரூபாய் உதவித்தொகை வழங்கி உள்ளோம். **2024-2025ஆம்** கல்வி ஆண்டில் **62** மாணாக்கர்கள் **Rs.12,83,000** கல்வி உதவித் தொகை பெற்று பயனடைந்துள்ளனர்.

நமதூரைச் சேர்ந்த கத்தோலிக்க மாணவ மாணவியர்களின் உயர் கல்விக்கான நிதியுதவியை **2025-2026ஆம்** கல்வியாண்டிற்கும் வழங்க உள்ளோம்.இவ்வுதவித் தொகையை பெறுவதற்கு மேல்நிலைப்பள்ளி (HSLC) பொதுத் தேர்வில் எழுபது விழுக்காட்டிற்கு (70%) மேல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் நிதியுதவி பெற்ற மாணாக்கர்கள் மற்றும் முதுநிலை பட்டய மாணாக்கர்களுக்கும் இவ்வாண்டும் கல்வி கட்டணத்திற்கான நிதியுதவி தேவையென்றால், கல்லூரி கட்டண ரசீது மற்றும் பருவத்தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களை இணைத்து மீண்டும் விண்ணப்பிக்கும் படி மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.அரசு வேலை வாய்ப்புக்கான தேர்வுகளுக்கு பயிற்சி புத்தகங்கள் தேவைப்படுவோரும் விண்ணப்பிக்கலாம். மற்றும் புனித தோமையார் மேல்நிலை பள்ளியில் பிளஸ் 1, பிளஸ் 2 பயிலும் நமதூர் மாணாக்கர்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்படின் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இதற்கான விவரங்கள் தேவைப்படின், திருமதி. **ரீனா செர்சியூஸ்** (Ph:9944103534) அவர்களிடம் நேரில் அல்லது தொலைபேசியில் அழைத்துப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். விண்ணப்பிக்க விரும்புவோர் எங்களின் இணையதளத்திற்கு (www.aramseivpp.in) சென்று விண்ணப்ப படிவம் மற்றும் தேவையான நகல்களை இணைத்து அனுப்பும் படி அன்போடு அழைக்கிறோம்.

**விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 15 JUNE 2025**

## அறம்செய்

**CHARITY FOR EDUCATION**

**BY A GROUP OF PATTANATHARS AROUND THE WORLD**

தொடர்புக்கு : **aramsei.vpp@gmail.com**

**www.aramseivpp.in**